செய்தி வெளியீடு எண் : 1435 நாள் : 19.07.2023

**மாணவர்களை, இளைஞர்களை புத்தொழில் முனைவோர்களாக உருவாக்கும் வகையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையில் அனைத்து திட்டங்களையும் ஒருமுகப்படுத்தி செயல்படுத்த வேண்டும்**

**மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் இன்று (19.07.2023) சிட்கோ தலைமையிடத்தில் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII), FaMe–TN, தாய்கோ வங்கி, சேகோசர்வ், இண்ட்கோசர்வ் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து தனித்தனியே ஆய்வுகள் மேற்கொண்டார்.

ஆய்வின் போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "கடந்த நிதியாண்டு தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் 152 புதிய கண்டுபிடிப்புகளுக்கு ரூ.3 கோடியே 32 லட்சம் மானியம் வழங்கப்பட்டது. மானியம் வழங்கப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளை, வர்த்தக ரீதியாக தயாரித்து, சந்தைப்படுத்தும் வகையில், புதிய கண்டுபிடிப்பாளர்களை புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்க வேண்டும். அவர்களுக்கு தேவையான உதவிகளை TN–Start–up நிறுவனம் மற்றும் சுய தொழில் திட்டங்கள் வாயிலாக அவர்களுக்கு தேவையான நிதியுதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.

புதிய தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தவும் அவர்களுக்கு தேவையான நிதி உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்க புதியதாக தொடங்கப்பட்ட FaMe–TN நிறுவனம் கடந்த நிதியாண்டில் 47 வங்கிகள் மூலம் 13,500 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.200 கோடி கடன் உத்திரவாதத்துடன் ரூ.1,930 கோடி கடன் உதவி வழங்கியுள்ளது பாராட்டத்தக்கது. இனி வரும் காலங்களில், அதிக அளவிலான தொழில் முனைவோர்களை உருவாக்க வேண்டும். அதுமட்டும் அல்லாமல், தமிழ்நாடு அரசின் புதிய திட்டமான வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடி தளம் TN–Treads வாயிலாக ரூ.159 கோடிக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்

நிறுவனங்கள் பயன் அடைந்துள்ளன. இத்தளத்தின் கீழ், இது வரை இணைக்கப்படாத அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களை உடனடியாக இத்தளத்தின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்கும் நோக்கத்துடன் துவக்கப்பட்ட தாய்கோ வங்கி, அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் நடப்பாண்டு 3,500 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.250 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளது. அந்த இலக்கினை எய்திடவும், வங்கியின் வாராக் கடன்களை விரைந்து வசூலிக்கவும் வேண்டும்.

தேயிலை கூட்டுறவுச் சங்கங்களின் இணையமான இண்ட்கோசர்வ் மூலம் ரூ. 67 .74 கோடி மதிப்பில் 15 தேயிலைத் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை வரும் 3 மாதத்திற்குள் முடித்து தரமான தேயிலை உற்பத்தியினை உறுதி செய்திட வேண்டும். கலப்பட ஜவ்வரிசியை தடுத்திடும் நோக்கிலும், வேதிப்பொருட்கள் கலப்படம் இல்லாத ஜவ்வரிசி மற்றும் அது சார்ந்த உற்பத்திப் பொருட்களுக்கு வர்த்தக முத்திரை பதிவு செய்திட அறிவிக்கப்பட்டது. அதனை உடனடியாக செயல்பாட்டிற்கு கொண்டு வர உரிய அலுவலர்கள் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்" எனத் தெரிவித்தார்.

ஆய்வில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, அரசு செயலாளர், திரு.அருண் ராய், இ.ஆ.ப., தொழில் முனைவேர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன இயக்குநர்/அரசு கூடுதல் தலைமைச் செயலர் திரு.உமாசங்கர், இ.ஆ.ப., தொழில் வணிக ஆணையர் திருமதி.சிஜி தாமஸ், இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் திருமதி.கிரேஸ் பச்சோவ், இ.ஆ.ப., சேகோசர்வ் மேலாண்மை இயக்குநர் திரு.லலித் ஆதித்யா நீலம் இ.ஆ.ப., இண்ட்கோசர்வ் CEO திருமதி. மோனிகா ராணா, இ.ஆ.ப., தாய்கோ வங்கி, CEO திரு. ரவிச்சந்திரன் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in